**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 258/2013**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **25.11.2025** |
| **பெயர்** | **சுந்தரம்** |
| **த/பெ** | **அங்கமுத்து** |
| **சாட்சி** | **DW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.26.p.m**

**குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கை வாதி எதற்காக தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது பூர்வீகம் கோளூர். தற்போதும் அங்கு தான் வசித்து வருகிறேனா என்றால் இல்லை. பொன்னேரியில் வசித்து வருகிறேன். பொன்னேரியில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் சுமார் 10 வருடங்களாக வசித்து வருகிறேன். வாதி கோளூரில் தான் வசித்து வருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண் 265/2, பட்டா எண் 8, நான்கு எல்லைகள் சரியாக தெரியவில்லை. ஆனால் துளசிராமன் மற்றும் கேசவராஜ் நிலங்கள், மற்றும் சாலை தான் வழக்கு சொத்தை ஒட்டி உள்ளது.

2. மேற்சொன்ன சர்வே எண்ணின் விஸ்தீர்னம் என்ன என்றால் 61 செண்ட் ஆகும். சண்முகசெட்டியார் என்பவரிடம் என் தகப்பனாரான 1ம் பிரதிவாதி கோளூரில் உள்ள சண்முகசெட்டியாரின் நிலத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான், குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தார். என் தாத்தாவும் அங்கு தான் வேலை பார்த்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் எத்தனை வருடங்களாக சண்முக செட்டியாரிடம் வேலை பார்த்து வந்தார் என்றால் நான் பிறப்பதற்கு முன்பில் இருந்தே வேலை பார்த்து வந்தார். சண்முக செட்டியார் காலமான பிறகு அவருடைய மகனான இராமகிருஷ்ணசெட்டியாரிடம் என் தந்தை வேலை பார்த்தாரா

என்றால் சண்முகசெட்டியார் இறப்பிற்கு பிறகே என் தந்தை அவரிடம் வேலைக்கு செல்வதை நிறுத்திவிட்டார். சண்முகசெட்டியாரே என் தந்தையை வேலையைவிட்டு நிறுத்திவிட்டார் என்றால் சரிதான். எதற்காக பணியில் இருந்து நிறுத்தினார்கள் என்றால் வயது காரணமாக நிறுத்தினார்கள்.

3. வழக்கிற்காக நான் பொயுரைக்கிறேன் என்றும் என் தந்தை சரிவர கணக்கு வழக்குகள் பராமரிக்காத காரணத்தினால் தான் நிறுத்திவிட்டார் என்றால் சரியல்ல, என் தந்தை படிக்கவில்லை. குமாஸ்தாவாக இருந்து உதவி செய்து தான் வந்தார். என் தந்தை வேலையைவிட்டு நின்ற பிறகு வாதியின் மகன் அந்த பணிக்கு நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். என் தந்தையை பணியை விட்டு நிறுத்திய காரணத்தினால் அதே ஊரில் இராமகிருஷ்ணசெட்டியார்க்கு விரோதமாக இருந்த முனிநாதராஜா வகையறாவிடம் என் தந்தை வேலைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல, முனிநாதராஜா வகையறாவிடம் பழக்கத்தில் இருந்தாரே தவிர வேலை எதுவும் செய்யவில்லை.

4. 2012 ல் இராமகிருஷ்ணசெட்டியார்க்கு சொந்தமான மரங்களை வெட்டிய காரணத்தினால் 1–ம் பிரதிவாதி மீது திருப்பாலைவனம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். என் தந்தை அவருக்கு சொந்தமான 8 செண்ட் நிலத்தில் தான் மரங்களை வெட்டினார். நான் வழக்கிற்காக பொய் உரைக்கிறேன் என்றும் காவல்நிலையத்தில் இதுபோன்று செயல்களை மீண்டும் செய்ய மாட்டேன் என்றும் என் தந்தையான 1–ம் பிரதிவாதி மன்னிப்பு கடிதம் எழுதிக் கொடுத்ததன் அடிப்படையில் அவர் விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். என் தந்தைக்கு படிப்பு அறிவு இல்லாத காரணத்தினால் கையொப்பம் மட்டும் போட்டார். 8 செண்ட் நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. கிரைய பத்திரம் அல்லது பட்டா உள்ளதா என்றால் பட்டா தான் உள்ளது.

5. பிரதிவாதிகள் 14.10.2009 ல் வாதியிடம் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் கிரைய ஒப்பந்தம் இல்லை என கூறுகிறேன் என்றால் ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் எங்களுடையது அல்ல. இந்த வழக்கை தொடுப்பத்றகு முன்பு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். அந்த அறிவிப்பிற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். எனது பிரமாணவாக்குமூலத்தில் கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று மறுத்துள்ளேன் என்றால் மறுத்துள்ளேன். அந்த காரணத்தினால் வாதி கையொப்பம் தடவியலுக்கு அனுப்ப வேண்டும் என்று மனு செய்ததன் பெயரில் மனு

அனுமதிக்கப்பட்டு தடவியல் துறையில் இருந்து அறிக்கையும் பெறப்பட்டது என்றால் சரிதான்.

6. அந்த அறிக்கையின் (Envelope) **Ex. C2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ( இந்த ஆவணம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**. தடவியல் அறிக்கையில் பிரதிவாதிகளின் கையொப்பம் கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பமும் ஒன்றாக தான் உள்ளது என நிரூபணம் செய்யப்பட்டது என்றால் நானும் என் தந்தையும் கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பம் இடவில்லை, அது போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம். வழக்கிற்காக நான் பொயுரைக்கிறேன் என்றும் Ex. C1 ஆவணத்தின் மூலம் கையொப்பம் உறுதி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. மீதி கிரையத் தொகையான ரூ. 1000–யும் வாதி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய தேதியில் இருந்து வாதி தான் ஸ்வாதீனத்தில் உள்ளார் என்றும் பிரதிவாதிகள் ஸ்வாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தற்போதும் பிரதிவாதிகள் தான் அனுபவத்தில் இருந்து வழக்கு சொத்திற்கான வரிகளை செலுத்தி வருகிறோம். பி.சா.ஆ 7 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அதில் ஏதேனும் சர்வே எண் காண்பிக்கப்பட்டு உள்ளதா என்று கேட்டதற்கு சாட்சி அது விவசாய கடன் அட்டை என்றும், சர்வே எண் இல்லை என்றும் கூறினார்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 01.02.p.m.**